சி.சி எண். 97/2018 நாள்: 17.06.2025

அ.சா.1 வீரப்பசெட்டியார், த/பெ. அருணாச்சல செட்டியார்

2-ம் எதிரி ஆஜர். 1-ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப் பொருத்து கு.வி.மு.ச பிரிவு 317 -ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. 15.01.2018 ல் காலை 06.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. சம்பவம் தொடர்பாக எங்கு சிகிச்சை பெற்றேன் என்றால் முதலில் காரைக்குடி சரண்யா மருத்துவமனைக்கு சென்றேன், அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள், அதனால் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் சென்றேன். எதிரிகளுக்கும் எனக்கும் இடையே நிறைய முன்விரோதம் இருந்தது.

2. ஆறாவயலில் அரசு மருத்துவமனை இருக்கும் பொழுது ஏன் காரைக்குடி சென்றேன் என்றால் ஆறாவயல் அரசு மருத்துவமனையில் மருத்துவர் இல்லை. மருத்துவமனையில் விறகு கட்டையால் அடித்ததால் காயம் ஏற்பட்டதாக சொன்னேன். மீனாட்சி மிஷன் மருத்துவமனை எத்தனை மணிக்கு சென்று சேர்ந்தேன் என்றால் நியாபகம் இல்லை. மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் எவ்வளவு நாள் இருந்தேன் என்றால் 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன்.

3. உங்களுக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்படவில்லை என்றும் சைக்கிளில் செல்லும் பொழுது நான் கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியில்லை. எதிரிகளுக்கும் எனக்கும் நிலுவையில் உரிமையியல் வழக்கை வாபஸ் பெற வைப்பதற்காக காலம் கடந்து ஒரு புகார் மனுவை அனுப்பி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் 19.01.2018 அன்று மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் வைத்து போலீஸ் புகாரை வாங்கிக் கொண்டார்கள்.

4. நான் போலீசிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் போலீசார் எனக்கு நகல் கொடுக்கவில்லை. நகல் கொடுக்காததற்கு எதுவும் நடவடிக்கை எடுத்தேனா

என்றால் இல்லை. மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் விபத்து ஏற்பட்டதாக தான் புகார் கொடுத்தேன் என்றும் அதனால் தான் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரும் நான் அளித்த வாக்குமூலமும் முரணாக உள்ளது என்றும் அதனால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றது தொடர்பான ஆவணங்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.